# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.15/2025 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | பார்திபன், சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>வடவணக்கம்பாடி காவல் நிலையம் |
| Father’s Name | : | . த.பெ.பொன்னுரங்கம் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | . 54 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 06.02.2026.

**1ம் எதிரி இறந்துவிட்டார், 2ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3ம் எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆல்பெர்ட் ஹெண்ரி பணி ஓய்வ ,பெற்றுவிட்டார். அதனால் அவருக்கு நீதிமன்ற அழைப்பாணைகள் சார்வு செய்ய இயலவில்லை. அவரது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 19.03.2018ம் அ.சா.1ன் புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.64/2018 இதச பிரிவு 294(b), 323, 506(2)இதச-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் அ.த.சா.ஆ.3 ஆகும். முதல் தகவல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும் சம்பவ சாட்சிகளாக சுப்பிரமணியன், பழனி, பாபு, அன்பு ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சுப்பிரமணி, தணிகாச்சலம் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும். 19.03.2018ம் எதிரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள்மீது இதச பிரிவு 294(b), 323, 506(2)-ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகளுக்கு எதிரான வழக்கு சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரிளுக்கு எதிராக நிலையத்தில் வைத்து கோப்புகள் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.